## முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.

## அ.வ.எண்.118/2018

2025–ம் வருடம் அக்டோபர் திங்கள் 25–ம் நாளன்று பிரதிவாதி தரப்பு சாட்சியாக பி.வா.சா.20–வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54 விதியின்படி 95வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.பிரகாஷ், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

**பெயர்.** : **சரவணன்** **தொழில்** :

**த/பெ.** : **வட்டம்** :

**முகவரி** : **மதம்** :

**ஜாதி** : **வயது** :

**முதல் விசாரணை:–**

நான் இவ்வழக்கில் 43வது பிரதிவாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். 43 வது பிரதிவாதியின் ஆதார் அட்டை நகல் பி.வா.சா.ஆ.111 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 16.10.2008 ஆம் தேதிய 43வது பிரதிவாதி பெயரிலான கிரைய ஆவணம் எண்.6311/2008 சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.112 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வில்லங்க சான்றிதழ் (01.01.2006 முதல் 14.10.2025) ஆன்லைன் பதிவிறக்க நகல் பி.வா.சா.ஆ.113 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (வில்லங்க சான்றிதழ் முழுமையாக இல்லாததால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.) 43வது பிரதிவாதி பெயரிலான கூட்டுப்பட்டா

எண்.1336 ஆன்லைன் பதிவிறக்க நகல் பி.வா.சா.ஆ.114 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 26.04.2018 ஆம் தேதிய DTCP Application Registration No.DTCP/P/138231/2017 ஆன்லைன் பதிவிறக்க நகல் பி.வா.சா.ஆ.115 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (அசல் ஆவணத்தை தாக்கல் செய்யாமல் புகைப்பட நகல்களை தாக்கல் செய்தததால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.) வாதிகள் தாக்கல் செய்த வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**1 முதல் 6, 8 முதல் 15, 18, 19, 21 முதல் 40, 42 முதல் 46, 48 முதல் 50, 52 முதல் 62, 64, 65, 67, 68, 69, 70 முதல் 75, 77 முதல் 87, 89 முதல் 98, 100, 102, 104 முதல் 107, 114, 115 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தற்போது கரூர் மாவட்டத்தில் குடியிருந்து வருகிறேன். மேற்சொன்ன என் சொந்த ஊரிலிருந்து தும்பிவாடி கிராமம் சுமார் 13 கிலோமீட்டர் தொலைவு இருக்கும். தும்பிவாடி கிராமத்தில் எனக்கும் என் குடும்பத்தாருக்கும் பூர்வீக வகையில் எந்த சொத்துக்களும் இல்லை. 106 நபர்கள் கிரையம் பெற்றதற்காக நான் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.113 வில்லங்க சான்றிதழ் யார் பெயரில் வாங்கினீர்கள் என்றால் என் பெயரில் தான் வாங்கினேன். நீங்கள் வாங்கிய கிரையம் பி.வா.சா.ஆ.112 செல்லாததால் அதன் அடிப்படையில் வாங்கிய பி.வா.சா.ஆ.114 கூட்டுப்பட்டாவும் செல்லாது என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.112 நீங்கள் வாங்கிய கிரையபத்திரத்தை பி.வா.சா.ஆ.8 ன் அடிப்படையில் எழுதிக்கொடுத்த ரவிச்சந்திரனுக்கே அதில்

குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களில் உரிமையில்லை என்பதால் பி.வா.சா.ஆ.112-ன் கீழ் உங்களுக்கு கிரையம் எழுதிக்கொடுப்பதற்கு ரவிச்சந்திரனுக்கு சட்டப்படி உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.115 ல் பதிவு செய்யப்பட்ட தேதிக்கும் பணம் செலுத்திய தேதிக்கும் வித்தியாசம் உள்ளது என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.115 DTCP அப்ரூவல் ஆவணம் வழக்கிற்காக போலியாக நீங்கள் தயார் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. நீதிமன்றத்திற்கு இன்று சாட்சியம் அளிக்க யார் உங்களை அழைத்து வந்தார்கள் என்றால் வழக்கறிஞர் அழைத்தின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

**ஒம்/.K.H.இளவழகன்.,**
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.